| D–6305 |
|---|

| Sub. Code |
|---|
| 31911 |

DISTANCE EDUCATION

M.A.(Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2024.

First Semester

இக்கால இலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours　　　　Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. சிறுகதையின் தொடக்கம் எவ்வாறு அமைதல் வேண்டும்?

2. ‘பச்சை நெருப்பு’ யாரால் எழுதப்பட்டது?

3. புதினம் என்றால் என்ன?

4. சிறை - யாருடைய படைப்பு?

5. நாடகம் என்னும் சொல்லின் பொருள் யாது?

6. வைரமுத்து - சிறுகுறிப்பு வரைக.

7. ‘தூர்’ கவிதையின் மையக்கரு யாது?

8. ‘தனிமனிதன்’ சிறுகதையில் இடம்பெறும் கதை மாந்தர் யாவர்?

9. முட்டை - சிறுகுறிப்பு வரைக.

10. தமிழின் முதல் புதினம் எது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) 'நாட்டு வணக்கம்' பாடல் வழி பாரதியாரின் நாட்டுப்பற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'பாரத தேசம்' பாடல் தரும் சிந்தனைகளை விளக்குக.

12. (அ) கரைந்தவர்கள் - தலைப்புப் பொருத்தத்தை நிறுவுக.

(அல்லது)

(ஆ) சிலிர்ப்பு - கதைச் சுருக்கத்தை விளக்குக.

13. (அ) 'கருப்பு மலர்கள்' தரும் கவிரயத்தைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) 'இரு பக்கங்கள்' தரும் சிந்தனைகளை வரிசைப்படுத்துக.

14. (அ) 'அழகின் இயலும் கூறும்' தரும் செய்திகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'இயற்கைவழி அழகைக் காண்டல்' என்னும் கட்டுரையில் திரு.வி.க. தரும் செய்திகளைப் பட்டியலிடுக.

15. (அ) புதுமைபித்தன் - குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) ஜெயகாந்தன் - குறிப்பு வரைக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. 'தேசிய கீதங்கள்' வெளிப்படுத்தும் பாரதியாரின் நாட்டுப்பற்றை விளக்கியுரைக்க.

17. 'வேலைக்காரி' நாடகத்தில் புலப்படும் அண்ணாவின் சமுதாய நோக்கைக் கட்டுரை வடிவில் தருக.

18. பிரபஞ்சனின் முட்டை வெளிப்படுத்தும் பல்வேறு மனித முகங்கள் குறித்துத் தொகுத்து எழுதுக.

19. ‘சிறை’ தரும் அனுராதா ரமணனின் படைப்பாளுமையைப் புலப்படுத்துக.

20. கி. ராஜநாராயணனின் கோபல்ல கிராமத்தில் வெளிப்படும் கிராமிய சூழலை விளக்குக.

———————

**D–6306**

**Sub. Code**
**31912**

DISTANCE EDUCATION

M.A.(Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2024.

First Semester

அறஇலக்கியங்களும் சமய இலக்கியங்களும்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. நிலமிசை நீடுவாழ்வார் யார்?

2. இறைவனடி சேராதார் யார்?

3. அந்தணர் என்போர் யார்?

4. ஒட்டாரோடு ஒட்டார் - யார்?

5. நல்வழி - ஆசிரியர் யார்?

6. பழமொழி நானூற்றின் ஆசிரியர் யார்?

7. இன்னா நாற்பது பெயர்க்காரணம் கூறுக.

8. கற்றல் இனிது - எப்போது?

9. பிறவாமை காக்கும் பிரான் - யார்?

10. போற்றித் திருத்தாண்டகம் - பெயர்க்காரணம் கூறுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) திருவள்ளுவர் - குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) பொருட்பால் - குறிப்பு வரைக.

12. (அ) கல்லாமை - குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) ஐம்புலனும் இன்பம் பெறுவது யாரிடத்தில்? விளக்குக.

13. (அ) வைக்கோல் பற்றிய தீ உவமையை விளக்குக.

(அல்லது)

(ஆ) சிவபுராணம் - குறிப்பு வரைக.

14. (அ) குலசேகர ஆழ்வார் - குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) நாலாயிர திவ்வியப் பிரபந்தம் - குறிப்பு வரைக.

15. (அ) தெய்வ மணி மாலை - விளக்குக.

(அல்லது)

(ஆ) ஆசிய ஜோதி அறிவுறுத்துவன யாவை?

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

ஏதேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. திருக்குறள் காமத்துப்பாலின் சிறப்பினைப் பாடப்பகுதி கொண்டு விளக்குக.

17. நீதிநூல்கள் - தமிழ் இலக்கியத்தின் மணிமகுடம் என்பதைப் பாடப் பகுதி கொண்டு நிறுவுக.

18. காரைக்கால் அம்மையார் - ஆண்டாள் பாடற் சிறப்புகளை ஒப்பிடுக.

19. தாயுமானவரின் பராபரக் கண்ணி பற்றிக் கட்டுரைக்க.

20. வள்ளலாரின் பக்தி நிலையினைக் கட்டுரைக்க.

———————

| D–6307 |
|---|

| Sub. Code |
|---|
| 31913 |

DISTANCE EDUCATION

M.A.(Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2024.

First Semester

இலக்கணம் – 1 தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இளம்பூரணம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours                Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. மாத்திரை என்றால் என்ன? மெய்யெழுத்தின் மாத்திரை அளவு என்ன?

2. ட, ற, ல, ள என்ற மெய்யெழுத்துக்களுடன் சேர்ந்து வரும் எழுத்துக்கள் யாவை?

3. உயிரளபெடை என்றால் என்ன?

4. எழுத்துப் போலி என்றால் என்ன?

5. பல்லிதழ் இயையப் பிறக்கும் எழுத்து யாது?

6. வற்றுச்சாரியை எவ்வாறு புணரும்?

7. ஐ, ஔ சாரியை பெறும் முறையைக் கூறுக.

8. ‘பனை’யும் ‘கா’வும் என்ன சாரியை பெறும்?

9. நாழி முன் உரி என்ற சொல் எவ்வாறு மயங்கும்?

10. குற்றியலுகரம் எத்தனை வகை? அவை யாவை?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) எழுத்துக்களின் மாத்திரை அளவுகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) மொழியிறுதி எழுத்துக்கள் குறித்து எழுதுக.

12. (அ) சார்பெழுத்துக்களின் பிறப்பிடத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) மூவகைத் திரிபுகளை விளக்குக.

13. (அ) சொற்கள் தொகுத்து வரும்போது மெல்லினம் தோன்றுமிடங்களைக் கூறுக.

(அல்லது)

(ஆ) அளவு, நிறை, எண்ணுப் பெயர்களைத் தொகுக்கும் முறைகளை விளக்குக.

14. (அ) அகர ஈற்றுச் சொற்கள் மயங்கி வரும் முறையை விளக்குக.

(அல்லது)

(ஆ) ஐகார ஈற்றுப் பெயர்கள் எவ்வாறு மயங்கும்? விளக்கம் தருக.

15. (அ) நும் என்ற பெயரின் வேற்றுமைப் புணர்ச்சியை விளக்குக.

(அல்லது)

(ஆ) குற்றுகர எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி விதிகளை விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விரிவான விடை தருக.

16. மொழி மரபு குறித்துக் கட்டுரைக்க.

17. சொற்கள் புணரும் முறைகளைக் கட்டுரைக்க.

18. சொற்களைத் தொகுக்கும் முறைகளைத் தொகை மரபு கொண்டு நிறுவுக.

19. உயிரெழுத்துக்கள் மயங்கும் முறைகளை விவரிக்க.

20. வன்தொடர், மென்தொடர், இடைத்தொடர் குற்றியலுகரப் புணர்ச்சிகளை விளக்குக.

| D–6308 |
|---|

| Sub. Code |
|---|
| 31914 |

DISTANCE EDUCATION

M.A.(Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2024.

First Semester

இலக்கியத் திறனாய்வியல்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours　　　　Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. Criticism என்ற கலைச் சொல்லைப் பயன்படுத்தியவர் யார்?

2. தமிழில் விமர்சனம் பற்றிய நூல் யாருடையது?

3. ஒப்பீட்டு முறையில் அமைந்த இலக்கியங்கள் இரண்டினைத் தருக.

4. வின்ஸ்செஸ்டரின் கற்பனை குறித்த விளக்கத்தைக் குறிப்பிடுக.

5. படிமம் என்பது யாது?

6. தொல்காப்பியம் குறிப்பிடும் களவுமெய்ப்பாடுகள் எத்தனை?

7. ஒலிநயம் என்பதன் பொருள் யாது?

8. ஹேரிலெவினின் சமுதாயவியல் பற்றிக் குறிப்பிடுக.

9. குறியீட்டியல் என்றால் என்ன?

10. உருவவியலின் முன்னோடிகள் யார்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) திறனாய்வின் பயன்களைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) பாராட்டு முறைத் திறனாய்வு பற்றி எழுதுக.

12. (அ) வில்லியம் தெய்லரின் கற்பனை பற்றிய விளக்கத்தைக் தருக.

(அல்லது)

(ஆ) இரண்டாம் நிலைக் கற்பனையைச் சான்றுடன் எழுதுக.

13. (அ) உணர்வு - உணர்ச்சிக்கான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) வடமொழியாரின் ஏஸக்கோட்பாட்டை விளக்குக.

14. (அ) போதலரின் கலை பற்றிய விளக்கத்தைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) அறவியல் கோட்பாடு பற்றி எழுதுக.

15. (அ) மானுடவியல் பற்றிக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) செவ்வியல் குறித்து எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. தமிழ்த் திறனாய்வின் வரலாற்றை விவரித்தெழுதுக.

17. ஒப்பீட்டு முறைத் திறனாய்வு குறித்துக் கட்டுரைக்க.

18. கற்பனையின் வகைகளைச் சான்றுகளுடன் எடுத்தியம்புக.

19. திறனாய்வில் சமூகவியல் பெறுமிடத்தை நிறுவுக.

20. குறியீட்டியல், உருத்தோற்றவியல் பற்றி விளக்குக.

---

| D–6309 |
|---|

| Sub. Code |
|---|
| 31921 |

DISTANCE EDUCATION

M.A.(Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2024.

Second Semester

இலக்கணம் – 2 தொல்காப்பியம் : சொல்லதிகாரம், சேனாவரையம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு தொடர்களில் விடை தருக.

1. உயர்திணைக்குரிய பால்களைக் குறிப்பிடுக.

2. வேற்றுமைகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

3. வேற்றுமை மயங்கியல் என்றால் என்ன?

4. அளபெடைப் பெயருக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

5. பெயர்ச் சொல்லின் இலக்கணத்தை எழுதுக.

6. வினைச் சொல்லின் பொது இலக்கணம் என்ன?

7. 'உம்' என்னும் இடைச்சொல் எப்பொருளில் வரும்?

8. மிகுதிப் பொருள் உணர்த்தும் உரிச்சொற்கள் யாவை?

9. 'தெவ்வு' என்பதன் பொருள் என்ன?

10. வினைத்தொகை என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) இருதினைப் பால்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'பேடி' என்ற சொல் குறித்து விளக்கி எழுதுக.

12. (அ) இரண்டாம் வேற்றுமைப் பொருட்பாகுபாட்டை விளக்குக.

(அல்லது)

(ஆ) ஆறாம் வேற்றுமையை விளக்கி எழுதுக.

13. (அ) இரண்டாம் வேற்றுமையும், ஏழாம் வேற்றுமையும் மயங்கும் முறைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) விளி மரபின் இலக்கணத்தை எழுதுக.

14. (அ) இடைச் சொல்லின் வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) முன்னிலை அசைச் சொற்கள் குறித்து எழுதுக.

15. (அ) உரிச்சொல்லின் பொது இலக்கணத்தை எழுதுக.

(அல்லது)

(ஆ) செய்யுள் ஈட்டச் சொற்கள் குறித்து விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றிற்கு விரிவான விடை தருக.

16. இருதினை ஐம்பால் ஈறுகளை எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

17. வேற்றுமைகள் குறித்துக் கட்டுரை வரைக.

18. உயர்திணைப் பெயர்கள் விளியேற்கும் முறைகளை விவரிக்க.

19. இடைச் சொற்கள் நிற்குமிடமும் வேறுபடும் விதமும் குறித்துக் கட்டுரைக்க.

20. உரிச் சொற்கள் குறித்து விளக்கி எழுதுக.

---

| D–6310 |
|---|

| Sub. Code |
|---|
| 31922 |

DISTANCE EDUCATION

M.A.(Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2024.

Second Semester

தமிழர் பண்பாடும் கலையும்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு தொடர்களில் விடை தருக.

1. சங்க காலச்சமயங்களைக் குறிப்பிடுக.

2. பண்பாட்டு ஊடாட்டம் என்றால் என்ன?

3. பாணர்கள் இசைத்த இசைக் கருவிகள் யாவை?

4. வள்ளிக் கூத்து என்றால் என்ன?

5. தொல்காப்பியத்தில் இடம்பெறும் நாடகச் செய்திகள் இரண்டினைக் குறிப்பிடுக.

6. 'ஆடுகளம்' என்றால் என்ன?

7. 19ஆம் நூற்றாண்டில் உருவான நாடக சபைகளை எழுதுக.

8. ஓவியத்தின் வேறு பெயர்களைக் குறிப்பிடுக.

9. சோழர் கால ஓவியங்களின் தனிச்சிறப்பு இரண்டினைச் சுட்டுக.

10. நால் வகைச் சிற்பங்கள் யாவை?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) சங்க காலச் சமய நெறிகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) அழகுக் கலைகள் குறித்து எழுதுக.

12. (அ) சிலப்பதிகார நூல் கூறும் இசை நுட்பம் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) குரவை, துணங்கை கூத்து வகைகளை விளக்குக.

13. (அ) இசைத் தமிழ் நூல்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) இருபத்தி நான்கு வகை மெய்ப்பாடுகளை விளக்குக.

14. (அ) 10ஆம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள் குறித்து விளக்கு.

(அல்லது)

(ஆ) நாயன்மார்கள் காலக் கோயில்களைப் பட்டியலிடுக.

15. (அ) சங்க கால ஓவியக்கலையை விளக்குக.

(அல்லது)

(ஆ) மதுரை நாயக்கர் கால ஓவியங்கள் குறித்து எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விரிவான விடை தருக.

16. தமிழர் பண்பாட்டில் சமயங்கள் பெறும் இடங்களை ஆராய்க.

17. சங்கால இசைக்கலைகள் பற்றிக் கட்டுரை வரைக.

18. நூற்றாண்டு அடிப்படையில் நாடகக்கலைகள் குறித்துக் கட்டுரை வரைக.

19. சங்க காலத்தின் பின்னான ஓவியக்கலைகளை விரிவாக விளக்குக.

20. தமிழரின் சிற்பக்கலைகளை ஆராய்க.

| D–6311 |
|---|

| Sub. Code |
|---|
| 31923 |

DISTANCE EDUCATION

M.A.(Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2024.

Second Semester

திறனாய்வுக் கோட்பாடு

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு தொடர்களில் விடை தருக.

1. இலக்கிய கோட்பாடு என்றால் என்ன?

2. புதுத்திறனாய்வு என்றால் என்ன?

3. அடிக்கருத்து என்றால் என்ன?

4. இலக்கியத்தில் உள்ளடக்கம் என்பது என்ன?

5. 'தலித்தியத் திறனாய்வு' சொல் விளக்கம் தருக.

6. மொழி அமைப்பியல் என்றால் என்ன?

7. இணைமுரண் என்றால் என்ன?

8. மொழி அமைப்பியல் குறித்து பூரிகோவின் கருத்து என்ன?

9. திறனாய்வுக் கோட்பாட்டில் நோக்கு நிலை என்றால் என்ன?

10. புலப்பெயர் சமூகத்தின் பொதுப் பண்புகளைக் குறிப்பிடுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) இலக்கியத் திறனாய்வு என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழ் இலக்கிய வரலாற்றை விளக்கி எழுதுக.

12. (அ) ஒப்பிலக்கியத் திறனாய்வு குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) இலக்கியம் மற்றும் வரலாற்றுப் பொருள் முதல் வாதம் குறித்து விளக்குக.

13. (அ) குறிப்பு வரைக - உளப் பகுப்பாய்வுத் திறனாய்வு.

(அல்லது)

(ஆ) குறிப்பு வரைக. தொன்பத் திறனாய்வு.

14. (அ) எடுத்துரைப்பியல் திறனாய்வு குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) பின் காலணித்துவத் திறனாய்வு பற்றிக் குறிப்பு வரைக.

15. (அ) திறனாய்வுக் கோட்பாட்டில் பனுவலும் வாசிப்பும் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) மாற்று வரலாற்றை உருவாக்குதல் குறித்து எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விரிவான விடை தருக.

16. புதுத் திறனாய்வுக் கொள்கைகளை விரிவாக விளக்குக.

17. மொழியியல் திறனாய்வுகள் குறித்து விளக்குக.

18. திறனாய்வுக் கொள்கைகள் பற்றிக் கட்டுரை வரைக.

19. மொழி அமைப்பியல் குறித்து கட்டுரை வரைக.

20. திறனாய்வுக் கோட்பாடுகளை ஆராய்க.

———————

**D–6312**

**Sub. Code**
**31924**

DISTANCE EDUCATION

M.A. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2024.

Second Semester

கல்வெட்டியல்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours    Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. பரகேசரி எனத் தொடங்கும் கல்வெட்டுகள் யார் காலத்தவை?

2. மகேந்திரவர்மப் பல்லவன் இயற்றிய வடமொழி நூல் எது?

3. தமிழ் மொழியில் எழுதப்பட்ட தொன்மை வாய்ந்த செப்பேடு எது?

4. இறையோலை எனப்படுவது யார்?

5. தகடூர் என்றழைக்கப்பட்ட ஊரின் தற்போதைய பெயர் என்ன?

6. அசோகரின் கல்வெட்டுகளைப் படித்துப் பொருள் கூறியவர் யார்?

7. சிந்து வெளி எழுத்துகள் பற்றி ஆராய்ந்தவர் யார்?

8. வட்டெழுத்தைப் பயன்படுத்தியவர்கள் யாவர்?

9. தமிழ்நாட்டில் சிந்துவெளி நாகரிகம் தொடர்பான குறியீடுகள் கிடைத்த நான்கு இடங்களைக் கூறுக.

10. கரோஷ்டி எழுத்தைப் பயன்படுத்தியவர்கள் யாவர்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) பாண்டியர் காலக் கல்வெட்டுகளின் சிறப்பினை விவரிக்க.

(அல்லது)

(ஆ) சோழர் கல்வெட்டுகள் கூறும் வரலாறுகளை எழுதுக.

12. (அ) தென்னிந்தியக் கல்வெட்டுகளின் இன்றியமையாமை குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) கல்வெட்டுகள் - செப்பேடுகள் வழி அறியலாகும் சோழர்கால வரிகள் குறித்த செய்திகளை எழுதுக.

13. (அ) சோழர் கால அளவை முறைகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) கே.வி. சுப்பிரமணிய ஐயரின் கண்டுபிடிப்புகள் குறித்து எழுதுக.

14. (அ) கல்வெட்டாய்வில் ஐராவதம் மகாதேவனின் சாதனைகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) டாக்டர் மா. இராசமாணிக்கனாரின் பணிகள் குறித்து எழுதுக.

15. (அ) கரோஷ்டி - குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழ்பிராமி - குறித்து எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. வரலாற்றை அறிவதில் கல்வெட்டுகளின் பங்களிப்பினை விவரிக்க.

17. இந்தியக் கல்வெட்டாய்வின் வரலாற்றை விவரிக்க.

18. தமிழகக் கல்வெட்டின் பொதுத் தன்மை குறித்து விவரிக்க.

19. பழங்கால நாடகங்கள் குறித்துக் கட்டுரை எழுதுக.

20. குறியீடுகளின் இன்றியமையாமை குறித்துக் கட்டுரைக்க.

———————

**D–6313**

**Sub. Code**
**31931**

DISTANCE EDUCATION

M.A. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2024.

Third Semester

சங்க இலக்கியங்கள்.

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours                                    Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. நன்று பெரிது சிறக்க! தீது இல்லாகுக! என வேட்டவள் யாவள்?

2. பல் இதழ் நீலமொடு நிகர்ப்பது எது?

3. காலே பரி தப்பினவே; கண்ணே நோக்கி நோக்கி வாள் இழந்தனவே - யார் கூற்று?

4. மருந்து எனின் மருந்தே; வைப்பு எனின் வைப்பே - பாடலைப் பாடிய புலவர் யார்?

5. கடல் மரம் கவிழ்ந்தெனக் கலங்கி - இதன்வழி சுட்டப்படும் பொருள் யாது?

6. காமம் கைமிகின் தாங்குதல் எளிதோ - யார் கூற்று?

7. மணி அணி குன்றத்துக் கிழவன் எனப்படுவோன் பெயரைச் சுட்டுக.

8. ‘வெருவரு புனல் தார்’ – சுட்டியுரைக்க.

9. முத்துப்படு பரப்பின் முன்துறையைக் கொண்ட ஊர் எது?

10. ‘இயல்மொழி வாழ்த்து’ என்பதன் இலக்கணத்தைத் தருக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) மாலைக்காலத்தின் வருகையைக் குறிஞ்சிப்பாட்டு கொண்டு விளக்குக.

(அல்லது)

(ஆ) 'கழனி ஊரன் மார்பு பழனம் ஆகற்க' - சுட்டி எழுதுக.

12. (அ) 'மண்ஆர் கூந்தல் மரீஇய துயிலே' - பெருங்கடுங்கோவின் பாடற் கருத்தை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) குறுந்தொகையில் அமைந்துள்ள அள்ளூர் நன்முல்லையாரின் பாடற் கருத்துகளை விவரிக்க.

13. (அ) நின்ற சொல்லர், நீடுதோறும் இனியர்! என்னும் கபிலர் பாடல் திறத்தினை எடுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) தோழி திருமருதத் துறையின் சிறப்புக் கூறும் தன்மையை விளக்குக.

14. (அ) வல்வில் ஓரியின் சிறப்புக்களாக வன்பரணர் குறிப்பனவற்றை விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) தசும்பு துளங்கு இருக்கை தரும் செங்குட்டுவனின் கொடை, வென்றிச் சிறப்புகள் யாவை?

15. (அ) அல்லல் நெஞ்சம் அலமலக்குறுமே - விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) திருந்துவேல் குமணன் நல்கிய வளனே - எடுத்துரைக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. ஏறுதழுவல் குறித்து முல்லைக்கலி உரைப்பனவற்றைத் தொகுத்துரைக்க.

17. அகநானூற்றில் அமைந்துள்ள பரணர் பாடல்களின் சிறப்புகளை நும் பாடப்பகுதி கொண்டு நிறுவுக.

18. தைந்நீராடல் குறித்த செய்திகளை பரிபாடல் கொண்டு தொகுத்துரைக்க.

19. சிறுபாணாற்றுப்படை காட்டும் நல்லியக்கோடனின் கொடைச் சிறப்புகளைக் கட்டுரைக்க.

20. ஐங்குநூற்றின் மருதத்திணைப் பாடல்களின் பொருள் அமைதியை விரித்தெழுதுக.

———————

| D–6314 |
|---|

| Sub. Code |
|---|
| 31932 |

DISTANCE EDUCATION

M.A.(Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2024.

Third Semester

காப்பியங்கள்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours — Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. காப்பியம் என்பதன் பொருள் யாது?
2. "மங்கல அணியின் பிறிதணி மகிழாள்" - கண்ணகி ஏன்?
3. கண்ணகி, மாதவியின் கண்கள் எங்ஙனம் துடித்ததாக இளங்கோ கூறுகின்றார்?
4. கானல்வரிக் காதை சுட்டும் வரிப்பாடல்கள் யாவை?
5. புகார் நகர மக்கள் இல்லுறை தெய்வத்தை எவ்வாறு வழிபட்டனர்?
6. தேவந்தியிடம் கண்ணகி "பீடன்று", என்று கூறக் காரணம் என்ன?
7. "பெரிய புராணம்" – குறிப்பு தருக.
8. ஆசையை அறுக்கும் வழியாக வீரமாமுனிவர் கூறுவது யாது?
9. நளவெண்பா - பாயிரச் செய்திகளைத் தருக.
10. காமத்தின் இயல்புகளாக வளையாபதி கூறுவன யாவை?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) மாதவியின் இசையாசிரியர்கள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) அந்திமாலைப் பொழுதில் கோவலனைப் பிரிந்த கண்ணகியின் நிலையை விளக்குக.

12. (அ) சிலம்பு சுட்டும் மருவூர்ப்பாக்கம் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) மாதவி ஆடிய பதினோரு வகை ஆடல்களை விளக்குக.

13. (அ) கண்ணகி கண்ட கனவு பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) மணிமேகலையில் குறிக்கப் பெறும் ஐந்து வனங்கள் குறித்து விளக்குக.

14. (அ) வேடர்களை வென்ற சீவகன் பெற்ற சிறப்பினைத் தருக.

(அல்லது)

(ஆ) குந்தி தேவி மற்றும் துரியேதனன் புலம்பற் செய்திகளை விளக்குக.

15. (அ) வீரமாமுனிவரின் கற்பனைத்திறனைத் தேம்பாவணி வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) நிடத நாட்டின் சிறப்பினை எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. கண்ணகியிடம் கோவலன் கூறிய கட்டுரை மொழிகளை விவரிக்க.

17. இந்திர விழா பற்றி விஞ்சைவீரன் கூறியவற்றைத் தருக.

18. நாடுகாண் காதை வெளிப்படுத்தும் நாட்டு வளங்குறித்து விளக்குக.

19. உமறு காத்தாபு ஈமான் அடைந்ததைக் கட்டுரைக்க.

20. வாழ்வியல் நன்னெறிகளாக வளையாபதி கூறுவனவற்றைத் தருக.

———————

**D–6315**

| Sub. Code |
|---|
| **31933** |

DISTANCE EDUCATION

M.A.(Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2024.

Third Semester

சிற்றிலக்கியங்கள்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. கலிங்கத்துப்பரணியின் பாட்டுடைத் தலைவன் யார்?

2. தமிழில் தோன்றிய பரணி நூல்கள் நான்கினைக் கூறுக.

3. ஏழு பருவ மகளிர் யாவர்?

4. கலம்பகம் - பெயர்க்காரணம் தருக.

5. தூதுக்குரிய அஃறிணைப் பொருட்கள் யாவை?

6. கூடலிழைத்தல் என்றால் என்ன?

7. பெண்பாற் பிள்ளைத்தமிழுக்குரிய பருவங்கள் யாவை?

8. அம்புலிப் பருவம் என்றால் என்ன?

9. தஞ்சைவாணன் கோவையின் ஆசிரியர் யார்?

10. முத்தொள்ளாயிரம் - பெயர்க்காரணம் கூறுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) செயங்கொண்டாரின் கவித்திரத்தைக் கடைத்திறப்பு வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) கலிங்கத்துப்பரணி சுட்டும் வெப்பத்தின் கொடுமையை எடுத்துரைக்க.

12. (அ) சோழர் மரபினை உலா எவ்வாறு எடுத்துரைக்கிறது? - விளக்குக.

(அல்லது)

(ஆ) நந்திக்கலம்பகத்தில் காணலாகும் காதலுணர்வை அகமாந்தர் கூற்றுவழி விளக்குக.

13. (அ) நந்திக் கலம்பகம் உணர்த்தும் நந்திவர்மனின் கொடைச்சிறப்பினை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) குமரகுருபரர் தமிழைக் குழந்தையாகக் காணும் திறத்தைக் கூறுக.

14. (அ) வசந்தவல்லியில் அழகைக் குறவஞ்சி வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) குறவஞ்சி உரைக்கும் நகர் வளங்களைக் கூறுக.

15. (அ) முருகனை மீனாட்சியம்மை சீராட்டிய திறத்தினைக் கூறுக.

(அல்லது)

(ஆ) தஞ்சைவாணன் கோவை சுட்டும் பாங்கி மதியுடன்பாட்டு நிலையை விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. காளி கோயிலின் அமைப்பினைக் கலிங்கத்துப்பரணி வழி எடுத்துரைக்க.

17. மங்கைப் பருவப் பெண்ணின் அழகு, தூது விடுத்த தன்மையை விவரிக்க.

18. தமிழின் பெருமைகளாகத் தமிழ்விடு தூது கூறுவனவற்றை விளக்குக.

19. குறவஞ்சி சுட்டும் நாட்டுவளம், நகர்வளச் சிறப்பினைக் கூறுக.

20. முத்துள்ளாயிரத்தில் சோழனின் வீரம், கொடை குறித்து ஆசிரியர் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

| D–6316 |
|---|

| Sub. Code |
|---|
| 31934 |

DISTANCE EDUCATION

M.A.(Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2024.

Third Semester

இலக்கணம் - 3 தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. பாலைத் திணைக்குரிய பொழுதுகளைக் குறிப்பிடுக.

2. உழிஞைத் திணையின் இலக்கணம் தருக.

3. தார்நிலை என்றால் என்ன?

4. வரைதல் எத்தனை வகைப்படும் அவை யாவை?

5. தலைவன் ஊடல் கொள்ளும் இடங்களைக் குறிப்பிடுக.

6. இறைச்சி என்றால் என்ன?

7. அச்சம் தோன்றுவதற்குரிய நிலைக் களன்கள் எவை?

8. மெய் உவமத்திற்கு எடுத்துக்காட்டு தருக.

9. அளவடி என்றால் என்ன?

10. வழிநூலின் வகைகளைக் குறிப்பிடுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) கைக்கிளையின் இலக்கணத்தைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) வெட்சிப் போரினை விளக்குக.

12. (அ) தானை, யானை, குதிரை மறங்களைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) தொடாக் காஞ்சி, மகட்பாற் காஞ்சித் துறைகளை விளக்குக.

13. (அ) மதியுடம்படுதல் பற்றிக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) கற்பியல் குறிப்பிடும் கரண முறைகளைத் தருக.

14. (அ) வரைதல் வேட்கை பற்றிக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) உவம உருபுகளை விளக்குக.

15. (அ) ஈரசைச் சீர்களைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) நூலில் தவிர்க்கப்படவேண்டிய குற்றங்கள் எவை?

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. அகத்திணையியல் குறிப்பிடும் பிரிவுச் செய்திகளை விவரிக்க.

17. வாகைத்திணையின் பாகுபாடுகளைக் கட்டுரைக்க.

18. எண்வகை மெய்பாடுகளை விவரித்தெழுதுக.

19. தொடை வகைகளைச் சான்றுகளுடன் விவரி ?

20. உயிர்ப்பாகுபாடுகளை கட்டுரை வடிவில் தருக.

---

| D–6317 |
| --- |

| Sub. Code |
| --- |
| 31941 |

DISTANCE EDUCATION

M.A.(Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2024.

Fourth Semester

ஒப்பிலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours                                Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. ஒப்பிலக்கியத்தின் குறிக்கோள் யாது?

2. ஒப்பிலக்கியத்தின் பண்புகள் யாவை?

3. ஒப்பியல் நோக்கு என்ற நூலின் ஆசிரியர் யார்?

4. 'உலக இலக்கியம்' என்ற தொடரை முதலில் பயன்படுத்தியவரின் பெயரைச் சுட்டுக.

5. இயற்கை அறிவியல் கோட்பாடு என்றால் என்ன?

6. ஒப்பிலக்கிய அணுகுமுறையின் பயன்களைத் தருக.

7. காரண காரிய ஆய்வு என்றால் என்ன?

8. இணை இயல் நோக்கு - விளக்கம் தருக.

9. மொழி பெயர்ப்பாளனின் தகுதிகள் யாவை?

10. உளவியலின் வகைகள் யாவை?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் பக்க அளவில் விடை தருக.

11. (அ) ஒப்பிலக்கியத்தில் உவமைகள் பெறும் இடத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) நான்கு வகை இலக்கியப் பார்வைகளைத் தருக.

12. (அ) செலகல் இரட்டையரின் கருத்துக்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கிரிம் சகோதரர்களின் ஒப்பிலக்கியக் கருத்துகளை விளக்குக.

13. (அ) ஆங்கிலத்தில் ஒப்பிலக்கியத்தின் வளர்ச்சிகளை சான்றுடன் நிறுவுக.

(அல்லது)

(ஆ) ஒப்பிலக்கிய வளர்ச்சியில் பல்கலைக் கழகங்களின் பங்கு யாது?

14. (அ) கூர்தல் அறக்கோட்பாடு என்றால் என்ன?

(அல்லது)

(ஆ) மொழிபெயர்ப்பு அறிவியலா? கலையா? விளக்குக.

15. (அ) ஆற்றல் கொள்கை என்றால் என்ன?

(அல்லது)

(ஆ) இலக்கியத்தில் உளவியலின் நிலை என்ன என்பதைச் சுட்டுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் மட்டும் கட்டுரை அளவில் விடை தருக.

16. ஒப்பிலக்கியத்தின் தோற்றம் வளர்ச்சி குறித்து கட்டுரைக்க.

17. பிரெஞ்ச் இலக்கிய வரலாற்றில் ஒப்பிலக்கியம் பெறும் இடத்தை நிறுவுக.

18. மொழி பெயர்ப்பு முறைகள் குறித்த விளக்கியுரைக்க.

19. ஒப்பிலக்கியத்தில் அயலகத் தமிழ் அறிஞர்களின் பங்கினை விவரி.

20. தொல்காப்பியர் குறிப்பிடும் வாய்மொழி இலக்கிய வகைகளைக் கட்டுரைக்க.

———————

| D–6318 |
|---|

| Sub. Code |
|---|
| 31942 |

DISTANCE EDUCATION

M.A.(Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2024.

Fourth Semester

பண்பாட்டு மானிடவியல்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. புத்தாய்வுக் காலத்திற்கு முந்தைய மானிடவியல் அறிஞர் இருவரின் பெயரினை குறிப்பிடுக.

2. Anthropologist என்னும் சொல்லை முதன்முதலில் பயன்படுத்தியவர் யார்?

3. அறிவொளிக் காலம் - சிறுகுறிப்பு தருக.

4. இந்தியாவில் மானிடவியல் வளர்ச்சியின் மூன்று நிலைகள் யாவை?

5. பிரபஞ்சத்தின் வரலாற்றை ஓராண்டுக்குள் சுருக்கியவர் யார்?

6. இனக்குழுவியல் என்றால் என்ன?

7. அமெரிக்க மானிடவியலின் தந்தை யார்?

8. பண்பாட்டை ஒப்பீடு என்றால் என்ன?

9. உள்ளார்ந்த பண்பாடு என்பது யாது?

10. பண்பாட்டு விழுமியங்கள் என்றால் என்ன?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) மானிடவியல் துறையில் ஹெரோடாட்டஸ் ஆற்றிய பணிகள் யாவை?

(அல்லது)

(ஆ) பிளாட்டோவின் குறிப்பிடத்தக்க ஆய்வுகளை விளக்குக.

12. (அ) மானிடவியல் துறையின் வளர்ச்சிக்கு அறிவொளிக் காலச் சிந்தகைளின் பங்கினைக் கூறுக.

(அல்லது)

(ஆ) பகுத்தாய்வு நிலையின் தன்மைகள் யாவை?

13. (அ) உடல்சார் மானிடவியலின் உட்கூறுகள் யாவை?

(அல்லது)

(ஆ) அமெரிக்க மானிடவியல் சிந்தனைகளை எடுத்துரைக்க.

14. (அ) மானிடவியல் ஆய்வில் தரவுகளைப் பெறும் வழிமுறைகள் யாவை?

(அல்லது)

(ஆ) உள்ளார்ந்த பண்பாடும் வெளிப்படைப் பண்பாடும் - விளக்குக.

15. (அ) ஆளுமையின் வகைகளாக மானிடவியலார் முன்வைக்கும் கருத்துகள் யாவை?

(அல்லது)

(ஆ) பொருள்முதல் வாதத்தினரின் மானிடவியல் அணுகுமுறையை எடுத்துரைக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. மானிடவியல் துறையின் வளர்ச்சிக் காலகட்டங்களை எடுத்துரைக்க.

17. இனக்குழு ஒப்பாய்வின் படிநிலைகள் யாவை? விளக்குக.

18. பண்பாட்டின் உட்கூறுகளின் தன்மைகளை விவரித்து எழுதுக.

19. தமிழகப் பழங்குடியினரின் பண்பாட்டு மாற்றங்களை எடுத்துரைக்க.

20. சாதியம் பற்றிய நவீனக் கோட்பாடுகளைக் கட்டுரைக்க.

**D–6319**

**Sub. Code**
**31943**

DISTANCE EDUCATION

M.A.(Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2024.

Fourth Semester

தமிழக வரலாறும் பண்பாடும்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours                                        Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. தமிழக எல்லைகளாகத் தொல்காப்பியம் சுட்டுவன யாவை?

2. குமரிக்கண்டம் என்பது எது?

3. களப்பிரர் என்போர் யார்?

4. விஜயாலயச் சோழன் - குறிப்பு தருக.

5. வாரிசுரிமைப் போரில் ஈடுபட்ட பாண்டிய இளவரசர்கள் யாவர்?

6. மருது சகோதரர்கள் பற்றிக் குறிப்பு தருக.

7. தமிழக உப்புச் சத்தியாகிரகம் எப்பொழுது யார்? தலைமையில் நடைபெற்றது?

8. சீகன் பால்கு ஐயர் பற்றி எழுதுக.

9. மணிக் கோயில் என்றால் என்ன?

10. பண்பாடு என்பது யாது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) தமிழக வரலாற்றை அறிய உதவும் சான்றுகளாவன யாவை?

(அல்லது)

(ஆ) பண்டைய மக்களின் கல்விநிலை குறித்து விளக்குக.

12. (அ) பிற்காலப் பல்லவர்கள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் குறித்து விளக்குக.

13. (அ) பாண்டிய நாடு பற்றி வெளிநாட்டவர்களின் குறிப்புகளைத் தருக.

(அல்லது)

(ஆ) பாளையப்பட்டு ஆட்சிமுறை பற்றி எழுதுக.

14. (அ) சுயமரியாதை இயக்கம் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழ்ப் பண்பாட்டில் இஸ்லாம் பெறும் இடத்தைக் குறிப்பிடுக.

15. (அ) சித்தன்னவாசல் ஓவியம் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழர்களின் அற வாழ்வியலை விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. சங்க காலத் தமிழக மன்னர்கள் பற்றி விவரிக்க.

17. சோழர்களின் ஆட்சிமுறை குறித்துக் கட்டுரைக்க.

18. ஆங்கிலேயர் ஆட்சியும் தமிழகச் சமூக நிலையும் பற்றி விளக்குக.

19. வீரமாமுனிவரின் தமிழ்த் தொண்டினைத் தருக.

20. கோயில்களின் வகைகள் குறித்துக் கட்டுரைக்க.

———————

| D–6320 |
|---|

| Sub. Code |
|---|
| 31944 |

DISTANCE EDUCATION

M.A.(Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2024.

Fourth Semester

ஆராய்ச்சி அறிமுகம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. வரலாற்று ஆய்வு என்றால் என்ன?

2. ஆய்வு நாகரிகம் என்பது யாது?

3. உற்றுநோக்கல் - விளக்கம் தருக.

4. குறுந்தொகை முதன்முதலில் எப்போது யாரால் பதிப்பிக்கப் பெற்றது?

5. மேற்கோள் அறம் என்றால் என்ன?

6. துணைநூற் பட்டியலில் வேறுபெயர்கள் யாவை?

7. ஒளிப்பதிவு - குறிப்பு தருக.

8. ஆய்வேடு செம்மைப்பட அமைய எத்தனை முறை எழுத வேண்டும்.

9. ஆய்வேட்டின் முதன்மைப் பகுதியில் இடம்பெறுபவை யாவை?

10. ஆய்வேட்டின் புறக்கட்டமைப்பில் இடம்பெறும் சான்றிதழ்கள் யாவை?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) செயல்முறை ஆய்வு என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) புள்ளிவிவர ஆய்வின் சிறப்பினை எடுத்துரைக்க.

12. (அ) ஆய்வாளருக்குரிய தகுதிகள் யாவை?

(அல்லது)

(ஆ) எஸ். வையாபுரிப் பிள்ளையின் பதிப்புப் பணிகள் யாவை?

13. (அ) சான்று மூலங்கள் என்றால் என்ன? வகைமை கூறி விளக்குக.

(அல்லது)

(ஆ) வரலாற்றாய்வு அணுகுமுறையின் சிறப்பினைக் கூறுக.

14. (அ) கட்டமைப்புடைய வினாத்தொகுதி என்றால் என்ன?

(அல்லது)

(ஆ) களப்பணிக்கு முன் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் யாவை?

15. (அ) பின்னிணைப்பின் பயன்கள் யாவை?

(அல்லது)

(ஆ) குறிப்பு அட்டை பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை எடுத்துரைக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. நாட்டுப்புறவியல் ஆய்வின் வகைமை கூறி விளக்குக.

17. ஆய்வில் உற்றுநோக்கல் பெறுமிடம் குறித்து மதிப்பிடுக.

18. நேர்காணலின் வகைமை கூறி விளக்குக.

19. ஆய்வில் அடிக்குறிப்பு, சான்றெண் விளக்கம், துணைநூற்பட்டியல் பெறுமிடம் குறித்து மதிப்பிடுக.

20. ஆய்வேட்டின் அமைப்பினைக் கட்டுரைக்க.